<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

<u>மேட்டூர் நகராட்சி</u>

நிகழும் ஸ்ரீ சுபகிருது வருடம் மார்கழி மாதம் 8 ம் தேதி ஆங்கில ஆண்டு 23.12.2022ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு மேட்டூர் நகர்மன்றத்தில் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நாள் : 19.12.2022**

**இடம்: மேட்டூர் அணை.**

நகர்மன்ற தலைவர்,
மேட்டூர் நகராட்சி.

<u>மன்றப்பொருள்</u>

1. நகராட்சி ஆணையாளரின் நவம்பர்–2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.175 நாள்.23.12.2022**

பதிவு செய்யப்பட்டது

2. மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு 32 எண்ணிக்கை பொது / சமுதாய கழிப்பிடங்கள் உள்ளது. இவற்றை சுத்தம் செய்து பராமரிக்க நகராட்சியில் போதிய தூய்மைப்பணியாளர்கள் இல்லாததால், 20 கழிப்பிடங்களை பொது மக்களிடம் கட்டணம் ஏதும் வசூலிக்காமல் ஓராண்டிற்கு சுத்தம் செய்து பராமரித்து வரவும், அதற்காக மாதம் 1–க்கு கழிப்பிடம் ஒன்றிற்கு சேவைக்கட்டணமாக ரூ.6,000/– அடிப்படையில் M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore என்ற தனியார் நிறுவனத்திற்கு இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.3415/2020/எச்1, நாள்.23.11.2021–ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டு அதன் பணிக்காலம் 30.11.2022 உடன் முடிவடைகிறது. M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore நிறுவனம் தனது 17.10.2022 ஆம் தேதிய கடிதத்தில், ஏற்கெனவே பராமரித்து வரும் சேவைக்கட்டணத்தின் அடிப்படையில் 20 கழிப்பிடங்களை மேலும் ஓராண்டிற்கு பராமரித்து வர சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். எனவே, பொது மக்களின் பொது சுகாதார நலன் கருதி கீழ்க்கண்ட 20 கழிப்பிடங்களை 01.12.2022 முதல் 30.11.2023 முடிய மேலும் ஓராண்டிற்கு சுத்தம் செய்து பராமரித்து வர M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கவும், அதற்கான சேவைக்கட்டணமாக மாதம் 1–க்கு கழிப்பிடம் ஒன்றிற்கு ரூ.6,000/– வீதம் 20 கழிப்பிடங்களுக்கு ரூ.1,20,000/– ஐ M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore அவர்களுக்கு வழங்கவும், இதற்காகும் ஓராண்டிற்கான தோராய செலவினம் ரூ.14,40,000/–ம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பொது / சமுதாய கழிப்பிடம் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | தங்கமாபுரி பட்டிணம் மார்க்கெட் | 3 |
| 2 | தங்கமாபுரி பட்டிணம் (நியூ பார்ம் கீழ் தெரு) | 3 |
| 3 | பாரதி நகர் | 5 |
| 4 | காமராஜர் நகர் | 7 |
| 5 | காந்தி நகர் | 8 |
| 6 | மாதையன் குட்டை | 10 |
| 7 | ராஜாஜி நகர் | 10 |
| 8 | மீனவர் தெரு | 10 |
| 9 | எலிக்கரடு | 12 |
| 10 | அம்மன் நகர் | 12 |
| 11 | சக்தி நகர் | 13 |
| 12 | காவேரி நகர் | 17 |
| 13 | நேதாஜி நகர் | 21 |
| 14 | பிட்டர்மேன் குடியிருப்பு | 22 |
| 15 | கூலி லைன் முன்புறம் | 23 |
| 16 | கூலி லைன் பின்புறம் | 23 |
| 17 | தினசரி மார்க்கெட் | 24 |
| 18 | காவலர் குடியிருப்பு | 27 |
| 19 | குமரன் நகர் | 28 |
| 20 | கீழ் குள்ள வீரன் பட்டி | 29 |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க .எண்..3415/2020/எச்1**

**தீர்மான எண்.176 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது

3. மேட்டூர் நகராட்சியில் பழைய மற்றும் புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் புதிய சுத்திகரிப்பு நிலைய கடந்த 2014–ம் ஆண்டு முதல் பயன்பாட்டில் உள்ளது. சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரில், குளோரின் சேர்க்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குளோரின் சேர்க்கப்படும் குளோரினேஷன் பிளாண்ட் பழுதடைந்துள்ளதால், குளோரின் கசிவு ஏற்பட்டுள்ளது. குளோரின் கசிவு அதிகரிக்கும் பட்சத்தில் அருகில் உள்ள பகுதி மக்களுக்கு மூச்சு திணறல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் விநியோகம் செய்யப்படும் குடிநீரின் தன்மையை சரிசெய்ய, பழுதடைந்த குளோரினேஷன் பிளாண்ட்டினை சரிசெய்ய வேண்டிய அவசியம் உள்ளது. பழுதடைந்த குளோரினேஷன் பிளாண்ட்டினை சரிசெய்ய

உத்தேச செலவீனம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.5319 /2022/இ1

**தீர்மான எண்.177 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது

4. மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.6,7 மற்றும் 8 ஆகியவற்றிற்கு இந்நகராட்சிக்குட்பட்ட தங்கமாபுரிபட்டிணம் நீர்உந்து நிலையத்தில் இருந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்நீர்உந்து நிலையத்தில் உள்ள NRV மற்றும் Gun Metal Valve பழுதடைந்துள்ளதால், நீரேற்றம் செய்யப்படும் கால அளவு அதிகமாகிறது.பழுதடைந்த வால்வுகளை சரிசெய்யும் பட்சத்தில் நீரேற்றம் செய்யப்படும் கால அளவு குறைவாக ஏற்படுவதுடன், குடிநீர் விநியோகம் சீரான முறையில் செய்ய இயலும். எனவே பழுதடைந்த NRV மற்றும் Gun Metal Valve–களை புதியதாக மாற்றம் செய்ய உத்தேச செலவீனம் ரூ.80,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்ண்ப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.5320 /2022/இ1**

**தீர்மான எண்.178 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது

5. மேட்டூர் நகராட்சியில் புதிய சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் 1.80 LL கொள்ளவில் தரைமட்ட நீர்தேக்க தொட்டியின் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நகர பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தரைமட்ட நீர்தேக்க தொட்டியில் உள்ள 7.5HP மோட்டாரின் Delivery Pipe சேதமடைந்துள்ளதால் தமைட்ட நீர்தேக்க தொட்டியிலிருந்து உயர்மட்ட நீர்தேக்க தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்படும் நேரம் கூடுதலாக ஆகிறது. பழுதடைந்த Delivery Pipe–ஐ மாற்றுவதன் மூலம் நீரேற்றும் நேரத்தினை குறைக்க இயலும். பழுதடைந்த Delivery Pipe –ஐ மாற்றி அமைக்க உத்தேச செலவீனம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.5321/2022/இ1**

**தீர்மான எண்.179 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது

6. மேட்டூர் நகராட்சியில் இரண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதில் புதிய நீரேற்று நிலைய 30HP மோட்டாரின் பம்ப் பழுதடைந்துள்ளதால், குடிநீர் விநியோகம் செய்வதில் இடையூறாக உள்ளது. பழுதடைந்த பம்பினை சரிசெய்தால் மட்டுமே சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலும் . பழுதடைந்த பம்பினை சரிசெய்ய உத்தேச செலவீனம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.5322/2022/இ1

**தீர்மான எண்.180 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது

7. மேட்டூர் நகராட்சியில், மேட்டூர் வனசரக அலுவலர் அவர்களின் கடித ந.க.எண்.187/2022 நாள் 15.11.2022 ம் தேதிய கடிதத்தில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வனத்துறை மூலம் மரகத பூஞ்சோலை அமைத்திட ஏதுவாக இந்நகராட்சிக்கு சொந்தமான 1.00 ஹெக்டர் இடத்தினை களத்தணிக்கை செய்து ஒதுக்கீடு செய்பவும், ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் வனத்துறை சார்பாக மரகத பூஞ்சோலைகள் அமைத்து இரண்டு வருட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் மேற்கண்ட இடமானது நகராட்சியின் வசம் ஒப்படைக்கப்படும் என கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, வனச்சரக அலுவலர் கோரியபடி, இந்நகராட்சிக்கு சொந்தமான சர்க்கார் தோட்டம் சர்வே எண்.30/3, பிளாக் எண்.02 , வார்டு B –யில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான 1.00 ஹெக்டர் காலி இடத்தினை மரகத பூங்கா அமைக்க, தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.5323/2022/இ1

**தீர்மான எண்.181 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது

8. மேட்டூர் நகராட்சியில் பழைய குடிநீர் நீரேற்று நிலைய 60HP Motor-ன் Water Meter மற்றும் Air Valve பழுதடைந்துள்ளது. 60HP Motor–ன் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டும நீரின் அளவு Water Meter மூலமே கணக்கிடப்பட்டு வந்தது. Water Meter பழுதடைந்துள்ளதால் நீரேற்றும் செய்யப்படும் அளவினை கணக்கீடு செய்ய பழுதடைந்த Water Meter –ஐ சரிசெய்ய வேண்டிய அவசியம் உள்ளது. பழுதடைந்த Water Meter மற்றும் Air Valve –னை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5324/2022/இ1

**தீர்மான எண்.182 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது

9. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம், ந.க.எண்.32976/ஜே3/2018, நாள்.08.07.2019–ல் அனுமதி பெற்றுள்ளதன்படி, இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.5916/2018/எச்1, நாள்.13.08.2019, 30.07.2020, 09.08.2021 மற்றும் 06.09.2022–ல் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் 52 ஒப்பந்த பணியாளர்களைக் கொண்டு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பிரித்து வாங்குதல், தெரு கூட்டுதல், வடிகால் சுத்தம் செய்தல், சாக்கடை மண் அகற்றுதல், சேகரிக்கப்பட்ட குப்பைகளை உரிய இடத்தில் கொண்டு சேர்த்தல் ஆகிய தூய்மைப்பணி செய்ய தனியார் நிறுவனமாகிய M/s. Relyon Facility Services (P) Ltd.,

Chennai அவர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு அதன் ஒப்பந்த காலம் 13.11.2022 உடன் முடிவடைய உள்ளது. M/s. Relyon Facility Services (P) Ltd., Chennai அவர்கள் தனது 03.11.2022 ஆம் தேதிய கடிதத்தில், ஏற்கெனவே பணி செய்து வரும் விலை விகிதத்தின் அடிப்படையில் பணி புரிய சம்மதித்து ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளனர்.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம், ந.க.எண்.24608/2022/EA2, நாள்.21.10.2022 மற்றும் நாள்.11.11.2022-ல் தெரிவிக்கப்புட்ள்ள அளவுகோலின்படி, மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவைப்படும் பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்திக்கொள்ள இவ்வலுவலக கடிதம், ந.க.எண்.2412/2021/எச்1, நாள்.21.11.2022-ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று, புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைக்கும் வரை M/s.RELYON FECILITY SERVICES, CHENNAI அவர்களின் மூலம் முந்தைய விலை விகிதத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் 52 பணியாளர்களைக் கொண்டு 14.11.2022 முதல் 13.02.2023 முடிய 3 மாதங்களுக்கு மட்டும் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.21.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தம் நீட்டிப்பு செய்வது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.5916/2018/எச்1**
**தீர்மான எண்.183 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது

10. துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சேலம் அவர்களின் 23.08.2022 ஆம் தேதிய கடிதம் ந.க.ஏண்.199/இ5/2020-ல் சேலம் மாவட்டத்தில் 2022 ஏப்ரல் மாதத்தில் இருந்தே விட்டு விட்டு மழை பெய்து வருவதாலும், ஜூன் மாதத்திலிருந்து தென்மேற்கு பருவ மழை தொடர்ந்து பெய்து வருவதாலும் டெங்கு கொசுப்புழு வளர்நிலைகள் அதிகரித்து காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் அதிகரித்து வருவதாலும், டெங்கு காய்ச்சல் பரவாமலும், அதிகரிக்காமலும் தடுக்கவும் டெங்கு கொசுப்புழு தடுப்பு பணி செய்து டெங்கு கொசுப்புழு அடர்த்தியை (House Index) குறைக்கவும் 30 தற்காலிக DBC களப்பணியாளர்களை நியமனம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டதன்படி, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.122, நாள்.30.07.2020-ன்படி தினக்கூலி ரூ.371/-என்ற வீதத்தில் பணி செய்து வந்த நவரத்தினம் சுய உதவிக்குழு மூலம் 01.09.2022 முதல் 30.11.2022 முடிய மூன்று மாதங்களுக்கு அதே விலை விகிதத்தில் பணி செய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.123, நாள்.30.08.2022-ல் அனுமதி பெற்று அதன் அனுமதி காலம் 30.11.2022 உடன்

முடிவடையவுள்ளது. தற்போது மழைக்காலம் முடிவடையாததாலும், காய்ச்சல் தொற்று அதிகரித்து வருவதாலும் பொது சுகாதார அவசியம் கருதி நவரத்தினம் சுய உதவிக்குழு மூலம் 30 தற்காலிக DBC களப்பணியாளர்களை கொண்டு 01.12.2022 முதல் 28.02.2023 முடிய மூன்று மாதங்களுக்கு மட்டும் தினக்கூலி ரூ.371/-என்ற வீதத்தில் டெங்கு தடுப்பு பணிகளுக்கு பயன்படுத்திக்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1431/2020/எச்1

**தீர்மான எண்.184 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது

**11.** மேட்டூர் நகராட்சியில் நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகர் மன்ற உறுப்பினர்களுக்கும் அடையாள அட்டை வழங்குமாறு 28வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திரு. ரங்கசாமி அவர்களின் 25.11.2022ம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார். அதன்படி நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று தயார் செய்து வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ,8000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.5601/2022/பி2

**தீர்மான எண்.185 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது

**12.** அரசாணை எண்.GO (MS) NO.159 நாள்.08.11.2022-ல் மேட்டூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகளை ரூ.46.45 கோடி (Approved Project Cost: 46.45 கோடி GOI Share-23.23 கோடி, GOTN-13.94 கோடி, நகராட்சி பங்களிப்பு-9.28 கோடி)-ல் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.2033 /2022/இ1**

**தீர்மான எண்.186 நாள்.23.12.2022**

பதிவு செய்யப்பட்டது.

**13.** மேட்டூர் நகராட்சியில் 365 எண்ணிக்கையிலான புதிய LED (ஒளிர் உமிழ் விளக்குகள்) கொள்முதல் பொருத்த ரூ.38.29 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, 15th நிதிக்குழு Untied Grant (வரையறுக்கப்படாத பணிகள்)-ல் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.162 நாள்.31.10.2022ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சியில் பழைய தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றும் பணிக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகம் அவர்களிடம் இருந்த பெறப்பட்ட தொழில்நுட்ப அனுமதியின்படி, தெருவிளக்குகள் கொள்முதல் செய்வதற்கான திட்ட மதிப்பீட்டினை

மாற்றும்போது, திட்டமதிப்பீடு ரூ.38.29 இலட்சத்திலிருந்து, ரூ.38.50 இலட்சமாக மாற்றப்பட்டுள்ளது. எனவ கூடுதலாகும் ரூ.21,000/- செலவீனத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.4902 /2022/இ1**

**தீர்மான எண்.187 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

14. 2021-2022 ஆம் ஆண்டுக்கான இந்நகராட்சியின் மென்பொருள் வழியாக கேட்பு, வசூல் நிலுவை பட்டியல் விவரம், வைப்புத் தொகை பதிவேடு, முன்பணப் பதிவேடு, கடன் பதிவேடு, முதலீடுகள் பதிவேடு, சேமநல நிதி, இதர பதிவேடுகள், மான்யம் மற்றும் சொத்தாக்கம், தேய்மான கணக்கு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி வாரியாக இருப்பாய்வு கணக்கு, வரவு செலவு கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்புகள் உள்ளடக்கிய ஆண்டு கணக்குகளை கணினியில் தயார் செய்து தணிக்கைத் துறைக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு, ஏற்கனவே 2020-2021 ஆம் ஆண்டுக்கான இந்நகராட்சி கணக்கினை கணினியில் தயார் செய்து தணிக்கைத் துறைக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு, ஆண்டுக் கணக்கினை தயார் செய்து சமர்ப்பிக்க திரு.மு.அம்பேத்கார் என்பவரையே 2021-2022 ஆம் நிதியாண்டிற்கும் நியமித்துக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஆண்டுக் கணக்கினை இறுதி செய்து தணிக்கைக்கு சமர்ப்பிக்க மேற்படி கணக்கு ஆலோசகரை நியமித்து கொண்டு கணக்கு முடித்துக் கொள்வதற்கும் மற்றும் மேல்நடவடிக்கை தொடர்ந்ததற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3793/2022/பி1**

**தீர்மான எண்.188 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

15. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.31420/2022/SBM2, நாள்.15.11.2022-ல் அனைத்து பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளில், பொதுமக்கள் தங்கள் கருத்துகளை தெரிவிக்க, தூய்மை இந்தியா திட்ட இணையதளத்தில் (Swachhtam Portal) கொடுக்கப்பட்டுள்ள QR CODE ஒட்டப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்குட்பட்ட 25 கழிப்பறைகளிலும் (22+3) பைபர் கண்ணாடி கொண்டு அடைத்து QR CODE ஒட்டவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.38,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கிகரிக்கலாம்.

ந.எண்.க.517920/221எச்/

தீர்மான எண்.189 நாள்.23.12.2022

அனுமதிக்கப்பட்டது.

16. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் 2022–2023 ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கைகயின் போது **குடிநீர்த் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நடப்பு நிதியாண்டில் (2022–23) AMRUT–2.0 திட்டத்தில்** ரூ.14.23 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்ட பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டதற்க்கிணங்க மேட்டூர் நகராட்சியில் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ள திட்ட விரிவான அறிக்கை தயார் செய்யும் பணிக்கு ஒபந்தபுள்ளி கோரியதில் 23.09.2022 அன்று கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1 | M/s. Conquer Tehnologies Chennai-600 110 | 1.45% மொத்த மதிப்பீட்டு தொகையில் |
| 2 | M/s. AMPS Constructions,Bangalore | 2.0% மொத்த மதிப்பீட்டு தொகையில் |

அலுவலக குறிப்பு

1. மேற்படி பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டு தொகையில் 1.45% ஒப்பந்த சதவீதம் குறைவாக வழங்கிய திருவாளர்.M/s. Conquer Tehnologies, Chennai என்பவரின் ஒப்பந்த புள்ளிகளை பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின்அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் .

2. மேலும் அரசாணை எண்.GO (MS) NO.159 நாள்.08.11.2022–ன் படி மேட்டூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகள் மேற்கொள்ள ரூ.46.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து ரூ.46.45 கோடிக்கு திட்ட பிரேரணை தயார்செய்யப்பட்டதால் ஒப்பந்த சதவீதத்தை குறைத்து தரக்கோரி M/s. Conquer Tehnologies, Chennai அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது . மேற்படி நிறுவனத்திலிருந்து மதிப்பீட்டு தொகையில் (1% மற்றும் ஜிஎஸ்டி ) என்ற விகிதத்தில் பணியினை செய்ய சம்மதத்தின் பேரில் பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின்அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதிபெற்று மீண்டும் பணிஉத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் .

ந.க.எண்.2033/2022/இ1

**தீர்மான எண்.190 நாள்.23.12.2022**

அலுவலக குறிப்பு அங்கிகரிக்கப்பட்டது.

17. மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 மற்றும் வார்டு எண் 14 குள்ளவீரன்பட்டி மாரியம்மன் கோவில் தெற்கு புறம் மற்றும், மிலிட்டிரி காரர் தெருவில் சாலையின் நடுவில் உள்ள (F2/16(LT Pole) மற்றும் HTF/8 இரண்டு மின்கம்பங்களை சாலை ஓரம் மாற்றி அமைக்க பதிவு கட்டணம் முறையே ரூ.236/– மற்றும் ரூ.2360/– மொத்தம் ரூ.2596/– மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட தொகையினை மேட்டூர், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன்கருதியும், நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேட்டூர், தமிழ் நாடு மின்சார வாரியத்தை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.4711 /2022/இ1**

**தீர்மான எண்.191 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

18. மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான JCB (Earth Moving Equiment ) வாகனத்தின் தகுதி சான்று புதுப்பக்கும்பொருட்டு 30.11.2019 முதல் 30.11.2024 வரை உள்ள காலங்களுக்கு பசுமை வரி (Green Tax) ரூ.1000/–மற்றும் 01.04.2021 முதல் 31.03.2023 வரையில் MV Tax ரூ.25,050/– ஆக மொத்தம் ரூ.26,050/–யை மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அவசர அவசியம் கருதி என்னால் செலுத்தப்பட்டுள்ளது எனவும் மேற்கண்ட தொகையை வழங்குமாறும் இந்நகராட்சி பொறியாளர் 25.11.2022ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே மேற்கண்ட JCB வாகனத்திற்கு செலுத்தப்பட்ட தகுதி சான்று மற்றும் பசுமை வரி ரூ.26,050/–ஐ இந்நகராட்சி பொறியாளர் திரு.இரா.மணிமாறனுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 5325 /2022/இ1**

**தீர்மான எண்.192 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

19. இந்நகராட்சியில் 15வது மத்திய நிதியின் Untied Grant (2021–2022) கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு (LCV) Light Commercial Tipper Vechiles, 1 எண்ணிக்கை புதியதாக வாங்கும் பணிக்கு ரூ.7,30,000/–மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 28.10.2022ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | M/s Mani Motors and Traders, Thermal Four Road, Bavani Main Road, Mettur Dam-1 | (-)0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s. Lakshmi Auto Diesel Works, Workshop Corner, Salem Main Road Mettur Dam-1 | (+)2.74% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் M/s.Mani Motors and Traders, Mettur ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை காட்டிலும் (-) 0.01% சதவீதம் குறைவாக உள்ளது. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 4029-1/2022/இ1**

**தீர்மான எண்.193 நாள்.23.12.2022**

அலுவலக குறிப்பு அங்கிகரிக்கப்பட்டது.

**20.** இந்நகராட்சியில் 15வது மத்திய நிதியின் Untied Grant (2021-2022) கீழ் MCC-ல் Digital Weighing Machine 500 KG வரை 3 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு ரூ.31,500/- மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 28.10.2022ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/s.Sri Kaliyamman Trading Corporation, 60/101-A1B, R.No:6, RS Building, Kulakkarai Street, Kamaraj Nagar, Namakkal-637001 | (-)0.11% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s. Sri Athanur Amman Traders, 1-34, Kalappanaickenpatty(PO), Sendamangalam(T.K), Namakkal(Dt). | (+)2.27% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் M/s. Sri Kaliyamman Trading Corporation, Namakkal ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை காட்டிலும் (-) 0.11% சதவீதம் குறைவாக உள்ளது. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 4029-3/2022/இ1**

**தீர்மான எண்.194 நாள்.23.12.2022**

அலுவலக குறிப்பு அங்கிகரிக்கப்பட்டது.

**21.** இந்நகராட்சியில் 15வது மத்திய நிதியின் Untied Grant (2021-2022) கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் MCC-க்கு Napkin Destroyer machine 1 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு ரூ.96,000/–மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 28.10.2022ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/s.Sri Kaliyamman Trading Corporation, 60/101-A1B, R.No:6, RS Building, Kulakkarai Street, Kamaraj Nagar, Namakkal-637001 | (–)0.06% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s. Sri Athanur Amman Traders, 1-34, Kalappanaickenpatty(PO), Sendamangalam(T.K), Namakkal(Dt). | (+)0.99% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் M/s. Sri Kaliyamman Trading Corporation, Namakkal ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை காட்டிலும் (–) 0.06% சதவீதம் குறைவாக உள்ளது. அவசர அவசியம் கருதி, பொது மக்களின் நலன் கருதியும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 4029–2/2022/இ1**

**தீர்மான எண்.195 நாள்.23.12.2022**

அலுவலக குறிப்பு அங்கிகரிக்கப்பட்டது.

**22.** இந்நகராட்சியில் 15வது மத்திய நிதியின் Untied Grant (2021-2022) கீழ் வார்டு எண்.15–ல் நேதாஜி நகர், வார்டு எண் 27ல் எலிகரடு மற்றும் அம்மன் நகரில் உள்ள பெரியார் தெரு வார்டு எண் 26 ஆகிய இடங்களில் சிறு பாலங்கள் (RCC CULVERT) அமைத்தல் பணிக்கு ரூ.3,00,000/–மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 28.10.2022ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/s.R.M and Company, Engineering Contractor, 6/26A, Settipatty, Govindapadi(P.O), Kolathur, Mettur, | (–)0.11% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | Thiru. M. Ramasamy, 8/37,Periyavanavasi(P.O) Mettu (T.K) Salem(DT) | (+)1.30% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் M/s.R.M and Company, Kolathur ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை காட்டிலும் (–) 0.11% சதவீதம் குறைவாக உள்ளது. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 3858–6/2022/இ1

**தீர்மான எண்.196 நாள்.23.12.2022**

அலுவலக குறிப்பு அங்கிகரிக்கப்பட்டது

23. நகராட்சி ஆணையாளரின் டிசம்பர்–2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.197 நாள்.23.12.2022**

பதிவு செய்யப்பட்டது.

24. மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு–A, பிளாக் –43 நகரளவை எண்.11ல் உள்ள பழைய பேருந்து நிலைய கட்டிடத்தை அற்புறப்படுத்தி 6314.ச.மீ பரப்பளவில் புதிய பேருந்து நிலையம் கட்டிடம் கட்ட 17.11.2022ல் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது, மேலும் மேற்படி இடத்திற்கு தெற்குபகுதியில் அமைந்துள்ள இந்நகராட்சி வார்டு–A, பிளாக்–45 நகரளவை எண்.1ல் 2666.5 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நகராட்சி சாலையை புதிய பேருந்து நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்ட இடத்துடன் இணைத்தால் பேருந்து நிலையத்தில் விரிவான அபிவிருத்தி பணிகள் செய்ய இயலும் என்பதாலும் இதனால் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் பயன் பெறும் வகையில் நகர ஆவணங்களி ன் அடிப்படையில் உள்ள நகராட்சி ரோடை புதிய பேருந்து நிலையம் என வகைபாடு மாற்றம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1666/2022/எப்1)**

**தீர்மான எண்.198 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

25. மேட்டூர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேட்டூர் நகராட்சியில் உள்ள 30 வார்டுகளில் 100 சதவிகிதம் திறந்த வெளி மலம் கழித்தல் மற்றும் சிறுநீர் கழித்தல் இல்லாத ++ (Open Defecation Free++) நகரமாக அறிவிக்கப்பட உள்ளது. இப்பொருள் தொடர்பாக பொது மக்களிடம் ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் பெற **செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம்** அவர்களின் வழியே ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் அறிவிப்பு

செய்திடவும். அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.7,000/-ம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.6203/2015/எச்1)**

**தீர்மான எண்.199 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது

26. மேட்டூர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகளின் செயல்பாடுகளின் அடிப்படையில் மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் அமைச்சகம் வழங்கும் குப்பை இல்லாத நகரம் மூன்று நட்சத்திர குறியீடு பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக மேட்டூர் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேட்டூர் நகராட்சியினை குப்பை இல்லாத நகரம் என மூன்று நட்சத்திர குறியீடு பெற அறிவிக்கப்பட உள்ளது. இது குறித்து பொது மக்களிடம் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் பெற **செய்தி மக்கள் தொடர்பு** அலுவலர், **செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம்** அவர்களின் வழியே ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் அறிவிப்பு செய்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.7,000/-ம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2599/2021/எச்1)**

**தீர்மான எண்.200 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

27. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் 52 ஒப்பந்த பணியாளர்களைக் கொண்டு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பிரித்து வாங்குதல், தெரு கூட்டுதல், வடிகால் சுத்தம் செய்தல், சாக்கடை மண் அகற்றுதல், சேகரிக்கப்பட்ட குப்பைகளை உரிய இடத்தில் கொண்டு சேர்த்தல் ஆகிய தூய்மைப்பணி செய்ய தனியார் நிறுவனமாகிய M/s. Relyon Facility Services (P) Ltd., Chennai அவர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு அதன் ஒப்பந்த காலம் 13.11.2022 உடன் முடிவடைந்தது.

பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி M/s.RELYON FECILITY SERVICES, CHENNAI அவர்களின் மூலம் முந்தைய விலை விகிதத்தின்படி ஒப்பந்த அடிப்படையில் 52 பணியாளர்களைக் கொண்டு 14.11.2022 முதல் 13.02.2023 முடிய 3 மாதங்களுக்கு மட்டும் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.21.50 இலட்சத்திற்கும் மன்றப்பொருள் நபம்பர் 2022ல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டது. நகர்மன்றக்கூட்டம் நடைபெறாததால், அவசர அவசியம் கருதி நவம்பர் 2022 மாதத்தில் பணி புரிந்த தூய்மைப் பணியாளர்களுக்கு ஒப்பந்ததாரர் மூலம் ஊதியம் வழங்கும் பொருட்டு ஒப்பந்தம்

நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.5916/2018/எச்1)
தீர்மான எண்.201 நாள்.23.12.2022

அனுமதிக்கப்பட்டது.

28. மேட்டூர் நகராட்சியில் காலியாக உள்ள தட்டச்சு பணியிடத்தில் நிரந்தர பணியாளரை பூர்த்தி செய்யும் வரை மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் மாவட்ட அரசிதழ் எண்.11-ல் 2020-2021ஆம் ஆண்டிற்கு தட்டச்சு பணிக்கு நாள் ஒன்றிற்கு ரூ.611/- விலை விகிதப் பட்டியல் வரப்பெற்றது. மேற்படி விலைவிகிதப்பட்டியல் அடிப்படையாகக் கொண்டு 2021-2022 ஆம் ஆண்டுக்கு விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி கோரப்பட்ட விலைப்புள்ளியில் நாள் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலைப்புள்ளியாக ரூ.610/- என வழங்கிய எம்.சசிகலா, கணினி மையம், மேட்டூர் அணை என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று மேட்டூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.185 நாள்.30.12.2020-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சி என்பதால் கணினி தட்டச்சு பணி மிகவும் அத்தியாவசியமாக இருப்பதாலும், அரசு அலுவலகங்களிலிருந்து பெறக்கூடிய தபால்களுக்கு உடனுக்கு உடன் பதில் அனுப்ப வேண்டி இருப்பதாலும் பணியின் அவசர அவசியம் கருதி சென்ற ஆண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய எம்.சசிகலா, கணினி மையத்தின் விலை விகிதம் பட்டியலின்படி எம்.சசிகலா, மேட்டூர் என்பவருக்கு 31.12.2022 முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி சென்ற ஆண்டு பெறப்பட்ட அதே விலைப்புள்யின்படி 30.12.2022 முதல் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினங்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4563/2012/ சி1)**

**தீர்மான எண்.202 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

**29.** மேட்டூர் நகராட்சியில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தின்படியும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பு எண்.22-இல் உள்ளபடியும் புதிய பேருந்து நிலையம் அமைக்க தேவையான வடிவமைப்பு, திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கும் பணியினை மேற்கொள்ள Consultant ஒப்பந்தம் செய்யும் பணிக்கு, இந்நகர் மன்ற தீர்மான எண்.100 நாள்.28.07.2022 இல் ஒப்புதல்

பெறப்பட்டது. இதன்படி இப்பணிக்கு 23.09.2022 இல் மதிப்பீடு ரூ. 12.50 இலட்சதிற்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1 | M/s. Balaji Nagarajan Optimal Consltants & Contractors சேலம் –636 009 | 1.20% மொத்த மதிப்பீட்டு தொகையில் |
| 2 | M/s Conquer Tehnologies Chennai-600 110 | 1.50% மொத்த மதிப்பீட்டு தொகையில் |

அலுவலக குறிப்பு

மேற்படி பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தபுள்ளிகளில் M/s. Balaji Nagarajan Optimal Consltants & Contractors, சேலம் என்பவர் மொத்த திட்ட மதிப்பீட்டில் 1.20 % என்கிற விலை விகிதத்தில் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. Balaji Nagarajan Optimal Consltants & Contractors, சேலம் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.1666/2022/ இ1)**

**தீர்மான எண்.203நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

**30.** இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் நகராட்சி அலுவலக வளாகம் சுற்றிலும் கண்காணிப்பு கேமரா 12 எண்ணிக்கை பொருத்தும் பணிக்கு ரூ.1,25,000 மதிப்பீட்டிற்கு 03.12.2022 அன்று நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு 15.12.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப் பெற்ற கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | SUN SIGNS METTUR DAM | ரூ.1,24,600.00/– |
| 2 | SAI ADVERTISERS.METTUR DAM | ரூ.1,79,750.00/– |
| 3 | UP EVENT ORGANISERS METTUR DAM | ரூ.1,59,100.00/– |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் SUN SIGNS METTUR DAM அவர்களின் விலைப்புள்ளி பெறப்பட்ட மற்ற இரு விலைப்புள்ளிகளை விட குறைவாக உள்ளது, எனவே மேற்கண்ட SUN SIGNS, மேட்டூர் அவர்களின் குறைவாக உள்ள விலைப்புள்ளியை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

2. மேற்கண்ட பணிக்கு அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று விலைபுள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.5457/2022/இ1)**

**தீர்மான எண்.204 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

ஆணையாளர்

மேட்டூர் நகராட்சி.

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

## 23.12.2022 மன்ற கூட்ட நடவடிக்கைகளின் நகல்

நிகழும் ஸ்ரீ சுபகிருது வருடம் மார்கழி மாதம் 8ம் தேதி ஆங்கில ஆண்டு 23.12.2022 அன்று வெள்ளிக்கிழமை 12.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் அவசரக்கூட்டம் நடைபெற உள்ளதால் உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நாள் : 22 .12.2022**
**இடம்: மேட்டூர் அணை.**

**நகர்மன்ற தலைவர்,**
**மேட்டூர் நகராட்சி.**

**1.** நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம்,சேலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம், மற்றும் பல்வேறு அலுவலகங்களின் மூலம் காணொலி கூட்டமானது நடத்தப்படுகிறது. மேலும் இந்நகராட்சி முழுவதும் BSNL-Line வழியாகவே Net Connection வழங்கப்பட்டு வருகிறது. காணொலி கூட்டம் நடைபெறும் பொழுது Net Connection சில நேரங்களில் சரிவர கிடைக்கப்பெறுவதில்லை. எனவே அவசர நேரத்தில் பயன்படுத்த ஒரு மாற்று இணையதள (Other Network Connection) சேவை ஏற்படுத்தவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ10,000 /–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 4858/2022/இ1**

**தீர்மான எண்.205 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

2. மேட்டூர் நகராட்சியில் 5KV UPS 2 எண்ணிக்கையில் பழுதடைந்த நிலையில் உள்ளது. மின்வெட்டு ஏற்படும் நேரங்களில் வசூல் மையத்தில் வசூல் பணி நடைபெறாமல் கணினி செயலிழந்து விடுகிறது. மேலும் அலுவலக பணிகள் பாதிக்கப்படுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் காணொலி கூட்டம் அடிக்கடி நடைபெறுவதில் தடை ஏற்பட்டு கணினி செயல்பாட்டில் இல்லாமல் தடை ஏற்படுகிறது, இத்தடைகளை சரி செய்து பணியினை செய்வதற்கு 7.50 KVA UPS-2 Nos மற்றும் (12 Nos-12V-120 AH )பேட்டரிகள் புதியதாக வாங்கி பொருத்தும் பணிக்கு பொதுப்பணித்துறை விலை விவரப் பட்டியலின்படி (PWD Scheldule of Rate) வாங்க உத்தேச செலவீனம் ரூ.5,40,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 5605/2022/இ1**

**தீர்மான எண்.206 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

**3.** மேட்டூர் நகராட்சியில் கணினி பரிவில் புதிய கூடுதல் Printer ஏதும் இல்லாமல் உள்ளது. மேலும், பழைய Xerox இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்பட்டு பணிகள் பாதிக்கப்பட்டு வருகிறது. இதனால் அத்யாவசிய

பணிகள் அடிக்கடி அலுவலகத்தில் பணிகள் பாதிக்கப்பட்டு தாமதம் ஏற்பட்டு வருகிறது. எனவே புதிய Xerox இயந்திரம் GEM விலையின்படி வாங்க உத்தேச செலவினம் ரூ.3,91,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 4889/2022/இ1

**தீர்மான எண்.207 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.22083/2022/SBM2 நாள்.13.12.2022-ல், மேட்டூர் நகராட்சியில் "Material Recovery Facillties" (MRF) அமைக்க 0.26 இலட்சத்தில் SBM(U)2.0-SWM-ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, MRF அமைக்க உரிய நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 3MT திறன்கொண்ட, "MRF"-ஐ இந்நகராட்சிக்கு சொந்தமான சர்க்கார் தோட்டம் பகுதியில் அமைக்க நிர்வாக அனுமதி பெற திட்ட பிரேரணையை சமர்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 5697 /2022/இ1**

**தீர்மான எண்.208 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

**5.** அரசாணை எண் G.O(MS) NO.159 நாள்.08.11.2022-ல் மேட்டூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.46.45 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, பணிகளை மேற்கொள்ள, 19.12.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கான திட்ட மதிப்பீட்டில், நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து குடிநீர் விநியோக குழாய்களை மாற்றவும், புதியதாக 5.00MLD குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் 15வது நிதிக்குழு மான்யத்தில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள, நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தபுள்ளி, அறிவிப்பு செய்யப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.7ல் பகிர்மான குடிநீர் குழாய் மாற்றுதல் | 6.00 |
| 2. | மேட்டூர் நகராட்சி சீத்தாமலை நீரேற்று நிலையத்தில் உள்ள கிளாரிபையர்(Clarifier) பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் | 17.00 |
| 3. | மேட்டூர் நகராட்சி வார்டு எண்.12 எலிக்கரடு மேல் மற்றும் கீழ் பகுதியில் பிரதான குடிநீர் விநியோக குழாய் 100 mm Dia DI குழாய் அமைக்கும் பணி | 10.10 |
| 4. | மேட்டூர் நகராட்சியில் நேருநகர் கீழ்குள்ளவீரன்பட்டி மற்றும் இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் 150mm Dia DI அமைக்கும் பணி | 15.80 |

மேற்கண்ட பணிகளில் வ.எண்.1 முதல் 3 வரை உள்ள பணிகள் துவங்கப்படாத நிலையிலும் வ.எண்.4ல் உள்ள பணி பகுதி முடிக்கப்பட்ட நிலையிலும் உள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும் பட்சத்தில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் பணிகள் மேற்கொள்ளப்படும் போது உடனடியாக குடிநீர் குழாய்களை மாற்ற வேண்டிய நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட வ.எண்.1 முதல் 4 வரை உள்ள

பணிகளுக்கு, மாற்றாக நகராட்சியில் தற்போது அத்தியாவசிய தேவைகளான கிழக்கு பிரதான சாலை விரிவாக்கத்தினால், பாதாள சாக்கடை திட்ட ஆள் இறங்கும் குழிகள் உயரபடுத்துதல், நகராட்சி பகுதியில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளால் பழுதடைந்த சிறுபாலங்களை மேம்படுத்துதல், மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தில் விடுபட்ட , வீட்டு இணைப்புகள் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 5698 /2022/இ1**

**தீர்மான எண்.209 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

6. மேட்டூர் நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள பள்ளி கட்டடங்கள், சமையல் கூடங்கள், நூலக கட்டடங்கள், கழிப்பிட வளாகங்கள், அலுவலக கட்டடங்கள், மேல் நிலை நீர் தேக்க தொட்டிகள் மற்றும் இதர கட்டடங்களில் காலங்கடந்த நிலையிலோ அல்லது பழுதடைந்த மற்றும் மிகவும் மோசமான இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டடங்கள் அல்லது உபயோகப்படுத்தப்படாமல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ள கட்டடங்களை பாதுகாப்பாக இடிப்பதற்கு அரசாணை (நிலை )எண்.174 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5(1)) துறை நாள்.14.12.2022ல் உரிய வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். 5708 /2022/இ1**

**தீர்மான எண்.210 நாள்.23.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

23/12/22

ஆணையாளர்

மேட்டூர் நகராட்சி.

29/12/22